# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2306/35 - 2022 නොවැම්බර් මස 16 වැනි බදාදා - 2022.11.16

*2306/35 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி.3/2007*

### *1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொன்சியூலர் பணிகள் சட்டம்*

*8ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்*

*1981 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, கொன்சியூலர் பணிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மொஹமட் உவைஸ் மொஹமட் அலி சப்ரி ஆகிய நான், இவ்வறிவித்தல் மூலம் 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பயனுறும் வகையில் பின்வருமாறு குறித்துரைக்கின்றேன் -*

*(அ) இதற்கான அட்டவணை* I *இன் நிரல்* II *இல் தரப்பட்டுள்ள கட்டணங்கள் அவ்வட்டவணையின் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்ட, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவு மற்றும் அதன் பிராந்திய அலுவலகங்களினால் நிறைவேற்றப்படும் கொன்சியூலர் பணிகள் தொடர்பில் அறவிடப்படும்; அத்துடன்*

*(ஆ) இதற்கான அட்டவணை* II *இன் நிரல்* II *இல் தரப்பட்டுள்ள கடடணங்கள் அவ்வட்டவணையின் நிரல்* I *இல் குறித்துரைக்கப்பட்ட, இலங்கைத் தூதரகங்களினால் அல்லது துணைத்தூதரகங்களினால் நிறைவேற்றப்படும் கொன்சியூலர் பணிகள் தொடர்பில் அறவிடப்படும்.*

*2017, நவெம்பர் 9ஆந் திகதிய 2044/39 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவினால் நிறைவேற்றப்படும் கொன்சியூலர் பணிகள் தொடர்பான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மற்றும் 2018, பெப்புருவரி 9 ஆந் திகதிய 2057/35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைத் தூதரகங்களினால் அல்லது துணைத்தூதரகங்களினால் நிறைவேற்றப்படும் கொன்சியூலர் பணிகள் தொடர்பான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் அதன்கீழ் எவற்றுக்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.*


1A - G 38082 — 56 (2022/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கொன்சியூலர் பிரிவு மற்றும் அதன் பிராந்திய அலுவலகங்களினால் நிறைவேற்றப்படும் கொன்சியூலர் பணிகள் தொடர்பான கட்டணங்கள்**

| | நிரல் *I* | நிரல் *II* |
|---|---|---|
| | ***கொன்சியூலர் பணிகள்*** | ***கட்டணங்கள்*** |
| | **கொன்சியூலர் பிரிவு மற்றும் அதன் பிராந்திய அலுவலகங்களினால் உண்மையானவையென உறுதிப்படுத்தப்படும் ஆவணங்கள்** | |
| 1. | பரீட்சைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் பரீட்சைச் சான்றிதழ்கள் | ரூபா. 800.00 |
| 2. | வெளிநாட்டு பிரசையொருவருக்கு இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏதேனும் ஆவணம் | ரூபா. 3000.00 |
| 3. | ஏதேனும் ஏற்றுமதி ஆவணம் | ரூபா. 8000.00 |
| 4. | வேறு ஏதேனும் ஆவணம் | ரூபா. 1200.00 |

## அட்டவணை II

**இலங்கைத் தூதரகங்களினால் அல்லது துணைத்தூதரகங்களினால் நிறைவேற்றப்படும் கொன்சியூலர் பணிகள் தொடர்பான கட்டணங்கள்**

| | நிரல் *I* | நிரல் *II* |
|---|---|---|
| | ***கொன்சியூலர் பணிகள்*** | ***கட்டணங்கள்*** |
| 1. | **இலத்திரோனிக் (மின்னணு) ஆவண அத்தாட்சிப்படுத்தல் முறைமை (e- DAS) மூலமாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் அத்தாட்சிப்படுத் தப்படுவதற்காக இலங்கைத் தூதரகங்கள் அல்லது துணைத்தூதரகங்களினால் ஏற்றுக்கொள்ளப்படும் மற்றும் பதிவேற்றப்படும் ஆவணங்கள்.** | |
| | (1) ஆவணம் வைத்திருப்பவர் இலங்கைப் பிரசையாகவிருக்கும்போது | ஐ.அ.டொ 37 |
| | (2) ஆவணம் வைத்திருப்பவர் வெளிநாட்டு பிரசையாகவிருக்கும்போது | ஐ.அ.டொ 49 |
| 2. | **பிறப்பு பதிவு** | |
| | (1) பிறப்புச் சான்றிதழின் பதிவும் வழங்குதலும் | ஐ.அ.டொ 37 |
| | (2) பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை வழங்குதல் | ஐ.அ.டொ 22 |
| 3. | **இறப்பு பதிவுசெய்தல்** | |
| | (1) இறப்புச் சான்றிதழின் பதிவும் வழங்குதலும் | ஐ.அ.டொ 22 |
| | (2) இறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியை வழங்குதல் | ஐ.அ.டொ 22 |
| 4. | **திருமணங்களைப் பதிவு செய்தல்** | |
| | (1) திருமணத்தின் அறிவித்தல் (பொது/கண்டி) | ஐ.அ.டொ 30 |
| | (2) திருமணச் சான்றிதழின் பதிவும் வழங்குதலும் (பொது/கண்டி/முஸ்லிம்) | ஐ.அ.டொ 47 |
| | (3) விசேட உரிமத்தின்கீழ் திருமணமொன்றைப் பதிவு செய்தல் (பொது/கண்டி) | ஐ.அ.டொ 60 |
| | (4) திருமணச் சான்றிதழ் ஒன்றின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை வழங்குதல் (பொது/கண்டி/முஸ்லிம்) | ஐ.அ.டொ 22 |
| | (5) 24 ஆம் பிரிவின் கீழ் திருமண உரிமத்துக்கான விண்ணப்பம் (திருமணமொன்றின் அறிவித்தல்) | இலவசக் கட்டணம் |

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| ***கொன்சியூலர் பணிகள்*** | ***கட்டணங்கள்*** |
| **5. ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்தலும் சான்றுறுதிப்படுத்தலும் மெய்யுறுதிப் படுத்தலும் (சட்டமுறைப்படுத்தலும்)** | |
| (1) தடை எச்சரிக்கைக் கட்டளை | ஐ.அ.டொ 30 |
| (2) சமாதான நீதவான் ஒருவராக ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தல் | ஐ.அ.டொ 68 |
| (3) சத்தியக்கடதாசியின் சத்தியம் செய்தல் அல்லது உறுதிப்படுத்தல் | ஐ.அ.டொ 68 |
| (4) சத்தியம் செய்தலொன்றினை அல்லது உறுதிப்படுத்தலொன்றினை நிருவகித்தல் | ஐ.அ.டொ 68 |
| (5) அற்றோனித்தத்துவத்தை அல்லது பதிவுப் பத்திரத்தை அத்தாட்சிப்படுத்தல் | ஐ.அ.டொ 68 |
| (6) அத்தாட்சிப்படுத்தப்பட்ட உண்மைப்பிரதியை வழங்குதல் | ஐ.அ.டொ 12 |
| (7) இறுதிவிருப்பாவணத்தை அத்தாட்சிப்படுத்தல் | ஐ.அ.டொ 65 |
| (8) ஏனைய ஆவணங்களை அத்தாட்சிப்படுத்தல் (ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் கல்விச் சான்றிதழ்கள் தவிர) | |
| (ஆ) ஆவண சொந்தக்காரர் ஓர் இலங்கைப் பிரசையாகவிருப்பின் | ஐ.அ.டொ 43 |
| (அ) ஆவண சொந்தக்காரர் வெளிநாட்டுப் பிரசையாகவிருப்பின் | ஐ.அ.டொ 47 |
| (9) கல்விச் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தல் | ஐ.அ.டொ 12 |
| (10) ஏற்றுமதி ஆவணங்களின் தொகுதியொன்றின் அத்தாட்சிப்படுத்தல் | ஐ.அ.டொ 60 |
| **6. ஏனைய ஆவணங்கள்** | |
| (1) ஓய்வூதிய நோக்கத்திற்காக இலங்கை ஓய்வூதியர்களினால் செலுத்தப்படும் ஆயுட் சான்றிதழ்களை உள்ளடக்கிய எல்லா சான்றிதழ்களும் | இலவசக் கட்டணம் |
| (2) இலங்கைப் பிரசையொருவரின் மனித எச்சங்களை புதைத்தல் அல்லது தகனஞ்செய்தல் தொடர்பிலான ஆவணங்கள் | இலவசக் கட்டணம் |
| (3) இலங்கையரொருவரின் மனித எச்சங்களின் அனுப்புதல் தொடர்பிலான ஆவணங்கள் | இலவசக் கட்டணம் |
| (4) முன்னாள் இலங்கையரொருவரின் இடம்பெயர்ந்த மனித எச்சங்கள் அல்லது அஸ்திக்கான கடிதங்களை வழங்குதல் | ஐ.அ.டொ 30 |
| (5) ஏனைய எல்லா கடிதங்களின் அல்லது சான்றிதழ்களின் வழங்குகை- | |
| (அ) ஆவண சொந்தக்காரர் ஓர் இலங்கைப் பிரசையாகவிருப்பின்- | ஐ.அ.டொ 43 |
| (ஆ) ஆவண சொந்தக்காரர் வெளிநாட்டுப் பிரசையாகவிருப்பின்- | ஐ.அ.டொ 50 |
| (6) ஐரோப்பிய ஒன்றிய அல்லது வெளிநாட்டு வாகன உரிமத்தைப் பெறுவதற்காக இலங்கை வாகன உரிமத்தினை உறுதிப்படுத்துதல் | ஐ.அ.டொ 60 |
| (7) ஆட்சேபமற்ற கடிதத்தினை வழங்குதல் | ஐ.அ.டொ 30 |

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* |
|---|---|---|
| | ***கொன்சியூலர் பணிகள்*** | ***கட்டணங்கள்*** |
| **7.** | **ஆவணங்களின் மொழிபெயர்ப்பு** | |
| | *(1) ஆவண சொந்தக்காரர் ஓர் இலங்கைப் பிரசையாகவிருப்பின்–* | |
| | *(அ) ஆவணமொன்றின் மொழிபெயர்ப்பு – முதல் 100 சொற்கள்* | *ஐ.அ.டொ 43* |
| | *(ஆ) மேலதிக ஒவ்வொரு 25 சொற்கள்* | *ஐ.அ.டொ 7* |
| | *(2) ஆவண சொந்தக்காரர் வெளிநாட்டுப் பிரசையாகவிருப்பின்–* | |
| | *(அ) ஆவணமொன்றின் மொழிபெயர்ப்பு – முதல் 100 சொற்கள்* | *ஐ.அ.டொ 65* |
| | *(ஆ) மேலதிக ஒவ்வொரு 25 சொற்கள்* | *ஐ.அ.டொ 7* |
| | **அஞ்சல் கட்டணம்** | *அறவிடப்படவுள்ள உண்மையான தொகை* |

**மொஹமட் உவைஸ் மொஹமட் அலி சப்ரி**
*வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு,*
*2022, நவெம்பர் 11.*

EOG 11-0171